Business Minutes
CURRENT BUSINESS UPDATES

# JIPMER Receives Trophy for Highest Contribution to Armed Forces Flag Day Fund

December 18, 20251 minute read

JIPMER has been selected for the Trophy for the Highest Contribution towards the Armed Forces Flag Day Fund for the year 2024–25 among all organisations in the Union Territory of Puducherry. The recognition has been accorded by the Department of Sainik Welfare, Government of Puducherry, in appreciation of JIPMER's generous contribution and continued support to the welfare of Ex-Servicemen, War Veterans, Widows and their dependents



Shri K. Kailashnathan, Lieutenant Governor of Puducherry, and Shri N. Rangasami, Chief Minister Puducherry presented the trophy to JIPMER during the Armed Forces Flag Day Award Ceremony 2024–25 at Raj Nivas, Puducherry. Dr. Saka Vinod Kumar, Medical Superintendent, JIPMER received the award on behalf of JIPMER. Dr. Sharat Chauhan, , Chief Secretary, Puducherry and Shri. A. Kulothungan, Collector of Puducherry were present during the occasion.

The Department of Sainik Welfare has conveyed its profound appreciation and gratitude to the Director, JIPMER, and the entire institute for their wholehearted contribution towards the Armed Forces Flag Day Fund.

Speaking on the occasion Dr. Vir Singh Negi, Director, JIPMER said that the award reflects JIPMER's strong commitment to national service and its unwavering solidarity with the Armed Forces community. The Director further stated that the recognition marks yet another significant milestone in JIPMER's continued contributions to social and national causes.

Link: https://www.businessminutes.in/2025/12/jipmer-receives-trophy-for-highest-contribution-to-armed-forces-flag-day-fund.html

மாலை எக்ஸ்பிரஸ்
மாலை நாளிதழ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

# ஜிப்மரில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம்



புதுச்சேரி, டிச. 18-

மத்திய விஜிலன்ஸ் கமிஷனின் வழிகாட்டுதலின்படி ஜிப்மர் ஊழியர்களுக்கான லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாமை நடத்தியது. இது ஜிப்மரின் திறன் மேம்பாட்டு பிரிவின் கீழ் ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி வழிகாட்டுதலின் பேரில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி ஜிப்மர் திறன் மேம்பாட்டு பிரிவு பொறுப்பு அதிகாரி டாக்டர் ரவிக்குமார் சிட்டோரியா, ஜிப்மர் இணை இயக்குநர் ரங்கபாஷியம் ஆகியோரின் மேற்பார்வையில் நடந்தது. புதுவை அரசின் கணக்குகள் மற்றும் கருவூலங்களின் முன்னாள் இயக்குநர் அமிர்தலிங்கம் ஜிப்மர் ஊழியர்களுக்கான பயிற்சியை வழங்கினார்.

அவர் பொது நிர்வாகத்தில் ஊழல் தடுப்பு, நெறிமுறையான நிர்வாகம், நிதி ஒழுங்குமுறை, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு கூறல் உள்ளிட்ட மிக முக்கியமான அம்சங்கள் குறித்து விரிவாக உரையாற்றினார். மேலும் இந்த பயிற்சி முகாமில் முறைகேடுகளை தடுக்கும் நுட்பமான மற்றும் திறன்மிக்க வழிமுறைகளையும் நிறுவனத்தின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் ஊழியர்களுக்கு விளக்கப்பட்டது. ஜிப்மர் தனது ஊழியர்களின் திறன் மற்றும் அறிவு சார்ந்த பல்வேறு அம்சங்களை வலுப்படுத்தும் நோக்கில் தொடர்ந்து பயிற்சி திட்டங்களை நடத்தி வருகிறது.

இந்த நிகழ்வு ஜிப்மரின் நிர்வாக நெறிமுறைத் தரங்களை மேம்படுத்ததோடு வலுவான திறன் கட்டமைப்பையும் முன்னிறுத்தி நடைபெற்றது. ஜிப்மரின் தலைமை விஜிலன்ஸ் அதிகாரி டாக்டர் நந்தகிஷோர் மற்றும் ஜிப்மர் மூத்த நிர்வாக அதிகாரி ஹவாசிங் ஆகியோர் பயிற்சி முகாமை ஒருங்கிணைந்து நடத்தினர்.

மாலை
எக்ஸ்பிரஸ்
மாலை நாளிதழ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

# மாநிலத்தில் அதிக அளவில் கொடிநாள் நிதி வசூல் செய்த ஜிப்மருக்கு விருது-கவர்னர், முதலமைச்சர் வழங்கல்



புதுச்சேரி, டிச. 18-

2024-25ம் ஆண்டிற்கான புதுச்சேரி மாநிலத்தின் கொடிநாள் நிதி வசூலில் ஜிப்மர் புதுச்சேரி மாநிலத்திலேயே அதிக நிதியை அளித்து விருது பெற்றுள்ளது. புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முப்படை வீரர் நலத்துறையின் சார்பில் வருடந்தோறும் முன்னாள் படைவீரர்கள், போர்களில் உயிர்நீத்தவர்களின் குடும்பத்தி னருக்கு வழங்கப்படும் இந்த நிதி நாடு முழுவதும் அனைத்து நிறுவனங்களிலும் கொடிநாள் நிதியாக வசூலிக்கப்படுகிறது.

2024-25ம் ஆண்டிற்கான கொடிநாள் நிதி விருது நிகழ்வில் புதுச்சேரி கவர்னர் கைலாஷ்நாதன் மற்றும் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி ஆகியோர் ஜிப்மர் மருத்துவமனைக்கு 'புதுச்சேரி மாநிலத்தில் அதிக நிதி அளித்த நிறுவனமாக' பாராட்டுகளைத் தெரிவித்து அதற்கான விருதினை வழங்கினர். ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சகா வினோத்குமார் இவ்விருதினை ஜிப்மர் சார்பில் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் புதுச்சேரி தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான் மற்றும் புதுச்சேரி மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன் பங்கு பெற்றனர். முன்னாள் முப்படை வீரர் நலத்துறை, ஜிப்மர் இயக்குநர் மற்றும் ஊழியர்களுக்கு தங்களது பாராட்டுகளையும், நன்றி யையும் நிகழ்வில் தெரிவித்துக் கொண்டனர். இதுகுறித்து ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி கூறியதாவது, ஜிப்மர் முப்படை வீரர்களின் நலன் மற்றும் சேவை யில், ஜிப்மர் தனது அர்ப்பணிப்பை தொடர்ந்து அளித்து வருவதாகவும் இந்த விருது ஜிப்மருக்கு தேசிய நலன் மற்றும் சமூக பொறுப்புகளில் பங்களிப்பை பறைசாற்றுகிறது என்றும் குறிப்பிட்டார்.